இரண்டதம் தவணைப் பரீட்சை - 2025

தமிழ் இலக்கிய நயம்

## தரம் - 11

## விடைகள்

01. i. அ. பூக்கள் நிறைந்த சோலைகள் நதியின் அருகில் காணப்படுகின்றன. அங்கு மயில்கள் நடனமாடிக்கொண்டிருந்தன. குயில்கள் விரும்பி இசைபாடுகின்றன. விருப்பம் பொருந்திய மாலைகள் அருகே அசைகின்றன. இவ்வாறான சிறப்புக்களோடு காவேரி நடந்துவருகிறது.

ஆ. பகைவர்களுக்கு அச்சத்தைக்கொடுக்கின்ற வேலினை உடையவன்/ வேலினால் பகைவர்க்கு அச்சத்தை உண்டாக்குகின்ற ஆற்றல் மிக்கவன்.

ii. அ. மலர்மாலைகள் அசைந்தாடி ஒளிவீசும் மார்பினை உடையவன்

ஆ. ஒளி மழுங்கிய முகத்துடன் தோன்றிய வாலியின் மனைவியான தாரையின் விதவைக்கோலத்தைக் கண்டு தனது தாய்மார்களான சுமித்திரை, கோசலை முதலியோரும் இவ்வாறுதானே கைம்மைக் கோலத்தில் இருப்பார்கள் என எண்ணி வருந்தினான்.

iii. அ. வானத்து நட்சத்திரங்கள் நிலவையும் பெண்ணின் முகத்தையும் இதுதான் நிலவு இதுதான் முகம் என்று அறிந்துகொள்ளமுடியாது மயங்கித் திரிகின்றன.

ஆ. தற்குறிப்பேற்ற அணி நட்சத்திரங்கள் இயல்பாக அசையும் தன்மைமை கொண்டன. அவற்றைப் புலவர் மயங்கித் திரிவதாகக் கூறுதல்.

iv. அ சுஜாதா, கல் நீரில் அலைச் சுழியை ஏற்படுத்தி அதிரவைப்பது போல ஹைக்கூவும் வாசகனிடத்தில் அதிர்வை ஏற்படுத்தவல்லது.

ஆ. 5,7,5 அசைகள் கொண்ட ஜப்பானிய கவிதை

v. அ. பார்த்தீபன்

ஆ. அருகில் இருப்பவைகள் அவருடன் நிரந்தரமாக இருப்பதில்லை. அவருக்குப் பிடித்தவர்களால் இறுதியில் அவர் பிரிவு துன்பத்தையே அனுபவிக்கிறார்.

02. உரைப்பகுதி -

அ.கடிதத்தில் உள்ள பெயர்கள் அதற்குரியவர்களை நினைவுபடுத்துவதன்மூலம்

ஆ.சரீனாவை கடிந்து கொள்ளுதல்

இ அடுத்தவர் உரிமையில் தலையிடுவது அநாகரிகம் மனிதர்களது செயலை சுட்டிக்காட்டுதல்

ஈ. இதற்கு முன் செய்தறியாத செயல் எனக் கூறுதல், விரல் நடுங்குதல்

செய்யுட்பகுதி –

அ. கடிநகர் சென்று வாழும் மகளின் இல்லறப்பாங்கு பற்றி செவிலி நற்றாய்க்குக் கூறுதல்

ஆ. செவிலி – நற்றாய்

பேண் கடிநகர்சென்று வாழ்தல்

பட்டாடை அணிதல்

புளிப்பாகர் (பாரம்பரிய உணவு)

கணவன் தொழிலுக்குச் செல்லல் மனைவி வீட்டிலிருத்தல் கணவனுக்கு உணவு பரிமாறிய பின் உண்ணுதல்

இ. குழம்புசெய்ய மனம்வைத்தல்

பட்டாடையின் பெருமதியைக் கருதாமை

கண்ணில் ஏற்பட்ட வலியைக் கருதாமை

அன்போடு உணவு பரிமாறுதல்

நண்மையான மகிழ்ச்சி

ஈ. காந்தல் மலர்போன்ற விரல் - உவமை

குவளை உண்கண் - உவமை